**காங்கயம் நகராட்சி**
**மன்றக்கூட்டத்தாள்**

**நிகழும் சார்வரி வருடம் தமிழ் மாதம் வைகாசி 26–ஆம் நாள் ஆங்கில வருடம் 2020 ஜூன் 08– ஆம் தேதி திங்கள் கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற அவசர கூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**மன்றப்பொருள்:1**

**கோப்பு எண் : 00398/2020/இ1**

காங்கயம் நகராட்சி பகுதிகளில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள தார்சாலைகளில் குழாய் விஸ்தரிப்பு மற்றும் காலமுறை போன்ற காரணங்களால் பழுதுகள் ஏற்பட்டுள்ளது. இதனால் போக்குவரத்துக்கு மிகவும் சிரமமாக உள்ளதால் பொதுமக்கள் மற்றும் பள்ளிக்கு செல்லும் வாகனங்கள் சென்றுவர இடையூறாக உள்ளது. எனவே, பொதுமக்கள் நலன் கருதி கீழ்காணும் தார்சாலைகளை சீரமைக்க வேண்டியது மிகவும் அவசியமாகவும், அத்தியாவசியமாகவும் உள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 ராஜீவ் நகர் மெயின் மற்றும் குறுக்கு வீதிகள், வார்டு எண்.6 அய்யாச்சாமி நகர் காலணி குறுக்கு வீதிகள், வார்டு எண்.10 பங்களாபுதுார் ரோடு, வார்டு எண்.13,17,18 அகஸ்திலிங்கம்பாளையம் முதல் திருப்பூர் ரோடு பகுதிகளில் தார்சாலை சீரமைத்தல் | 125.00 |
| 2 | காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 சென்னிமலை ரோடு குறுக்கு வீதி, வார்டு எண்.7 பெரியார் நகர் மெயின் வீதிகள், வார்டு எண்.9 அழகேகவுண்டன்புதுார் ரோடு , வார்டு எண்.10 செம்மாங்காளி பாளையம் ரோடு பகுதிகளில் தார்சாலை அமைத்தல் | 125.00 |
| | **மொத்தம்** | **250.00** |

நகராட்சியில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் மேற்படி பணிக்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2020–21 (TURIP) திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வேண்டி நகராட்சிகள் நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு:**

மேற்படி பணிக்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2020–21 (TURIP ) திட்டத்தின்கீழ் நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வேண்டி நகராட்சிகள் நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1597 . நாள்.08.06.2020.**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

(ஒ.ம்)XXXXX
திரு.பு.பொன்னம்பலம்
ஆணையாளர்
மற்றும் தனி அலுவலர்
காங்கயம் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையாளர்
காங்கயம் நகராட்சி

**காங்கயம் நகராட்சி**
**மன்றக்கூட்டத்தாள்**

**நிகழும் சார்வரி வருடம் தமிழ் மாதம் ஆனி16–ஆம் நாள் ஆங்கில வருடம் 2020 ஜீன் 30– ஆம் தேதி செவ்வாய் கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற சாதாரண கூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**மன்றப்பொருள்:1**

**ந.க.எண்.577/2020/எச்–1**

காங்கயம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் புறநகர் பேருந்து நிலையம், நகர பேருந்து நிலையம், தினசரி மார்க்கெட் மற்றும் இந்நகராட்சிக்கு சொந்தமான சமுதாய கழிப்பிடங்கள் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள நகராட்சிக்கு சொந்தமான ஒன்பது எண்ணிக்கையிலான கட்டண மற்றும் பொது கழிப்பிடத்தில் பெண்களுக்கு தனியாக அமைக்கப்பட்டுள்ள கழிப்பறையில் நாப்கின்கள் பயன்படுத்துவதை எரியூட்டும் இயந்திரம் (Ininerator) கொண்டு எரியூட்டு செய்யப்பட்டு கழிப்பிடத்தை சுகாதாரமான முறையில் பயன்படுத்திட மேற்குறிப்பிட்ட கழிப்பிடங்களில் **நாப்கின் எரியூட்டும் இயந்திரம் (Ininerator)** பத்து எண்ணிக்கையில் வாங்கும் பணிக்காக உள்ளூர் தனியார் நிறுவன உரிமையாளர்களிடம் ஒரு இயந்திரத்திற்கான விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | தனியார் உரிமையாளர்கள் | தொகை (வரிகள் உட்பட) ரூ. |
|---|---|---|
| 1 | Star Gavis, Tiruppur | ரூ.44800/– |
| 2 | Sanmak India, Coimbatore | ரூ.45600/– |

மேற்படி விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய திருவாளர். Star Gavis, Tiruppur அவர்களது விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1598 . நாள்.30.06.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:2**

**ந.க.எண்.577/2020எச்1**

காங்கயம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.1 முதல் 18 முடிய உள்ள பகுதிகளில் கொரேனா தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அப்பகுதியில் உள்ள குடியிருப்புகள், வணிக வளாகங்கள் , தொழிற்சாலை பகுதிகள், பேரூந்து நிலையம், தினசரி மார்கெட், வாரச்சந்தை, அரசு அலுவலகங்கள், அரசு குடியிருப்புகள் அரசு மருத்துவமனை, மற்றும் தனியார் மருத்துவமனை அரசு மேல் நிலைப்பள்ளி துவக்கப்பள்ளிகள் ஆதிதிராவிடர் மாணவர்கள் விடுதி, மாணவியர் விடுதி, கோவில்கள் வழிபாட்டு தளங்கள், மசூதிகள், தேவாலயங்கள், அம்மா உணவகம், மின்மயானப்பகுதி பேரூந்து நிறுத்தும் இடங்கள், காங்கயம்

பேருந்து பணிமனை, வெளிநாடுகளில் இருந்து வந்து இந்நகராட்சி பகுதியில் வசிப்பவர்களின் குடியிருப்புகள், வெளிமாநிலங்களுக்கும் டெல்லியில் நடைபெற்ற மாநாட்டிற்கு சென்று வந்தவர்கள், அவர்களின் குடியிருப்புகள் நகராட்சியில் தூய்மை பணிக்கு பயன்படுத்தும் வாகனங்கள் அலுவலக வாகனங்கள் வெளியூரில் இருந்து இந்நகராட்சி எல்லைக்குள் வரும் வாகனங்கள் ஆகிய மேற்காணும் அனைத்து பகுதிகளும் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கையாக இந்நகராட்சி டிரேக்டர் எண்.TN33AZ0014- இல் பவர் ஸ்பிரேயர் கருவி பொருத்தி கிருமிநாசினி தெளிக்கும் பணி மேற்கொள்ள மேற்படி டிரேக்டர் வாகனத்திற்கு மினி டிரெய்லர் இரண்டு எண்ணிக்கை, 1000லிட்டர் கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் டேங்க், பவர் ஸ்பிரேயர் இரண்டு எண்ணிக்கை மற்றும் பி.வி.சி பைப் 100 மீட்டர் அளவில் இரண்டு எண்ணிக்கை ஆகியவை புதியதாக வாங்கிட விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | தனியார் நிறுவன உரிமையாளர்கள் | தொகை (வரிகள் உட்பட) ரூ. |
|---|---|---|
| 1 | ஓம் சரவணா எலக்ட்ரிக்கல்ஸ் &ஹார்டுவேர்ஸ், பூளவாடி, திருப்பூர் | ரூ.17,2,032/– |
| 2 | ஸ்ரீ ஆண்டாள் அக்ரி பேஸ்டு இம்ளிமெண்ட்ஸ், தாராபுரம் | ரூ.1,66,432/– |

மேற்படி விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய திருவாளர்.**ஸ்ரீ ஆண்டாள் அக்ரி பேஸ்டு இம்ளிமெண்ட்ஸ், தாராபுரம்** அவர்களது விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1599 . நாள்.30.06.2020**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:3**

**ந.க.எண். 580/2020/எச்1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 18 முடிய உள்ள பகுதிகளில் அன்றாடம் சேகரமாகும் குப்பைகளை அப்புறப்படுத்துவதற்கும், சாக்கடை சுத்தம் செய்வதற்கும், தெருக்களை கூட்டி சுத்தம் செய்தல், சாலையோரங்களில் வளர்ந்துள்ள புல், முள் செடிகளை வெட்டி அப்புறப்படுத்துவதற்கும 2020-2021-ம் ஆண்டிற்கு தளவாட சாமான்கள் வாங்கிட மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**மதிப்பீடு:5.00 இலட்சம்**

| வ. எ ண் | தேவையான பொருட்கள் | நிறுவனத்தின் பெயர் M/S சுமதி ஏஜென்சீஸ் , 39/2 வி.எஸ்.காம்பளக்ஸ்,ஈரோடு | | நிறுவனத்தின் பெயர் ஸ்ரீ அபி கிருஷ்ணா எலக்ட்ரிக்கல்ஸ் திண்டல், ஈரோடு | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை |
| 1 | மண்வெட்டி (பிடியுடன்) | ஒன்றுக்கு மட்டும் | 430.00 | ஒன்றுக்கு மட்டும் | 450.00 |
| 2 | காரசட்டி | ஒன்றுக்கு மட்டும் | 260.00 | ஒன்றுக்கு மட்டும் | 265.00 |
| 3 | சவுள் பிடியுடன் | ஒன்றுக்கு மட்டும் | 740.00 | ஒன்றுக்கு மட்டும் | 760.00 |
| 4 | பிக்காஷ் பிடியுடன் | ஒன்றுக்கு மட்டும் | 790.00 | ஒன்றுக்கு மட்டும் | 810.00 |
| 5 | கடப்பாறை | ஒன்றுக்கு மட்டும் | 2050.00 | ஒன்றுக்கு மட்டும் | 2090.00 |
| 6 | மூங்கில் கூடை | ஒன்றுக்கு மட்டும் | 550.00 | ஒன்றுக்கு மட்டும் | 575.00 |
| 7 | மூங்கில் கூடை சிறியது | ஒன்றுக்கு மட்டும் | 490.00 | ஒன்றுக்கு மட்டும் | 515.00 |
| 8 | 3- பல் கொக்கி | ஒன்றுக்கு மட்டும் | 760.00 | ஒன்றுக்கு மட்டும் | 780.00 |
| 9 | சாக்கடை சுரண்டிபிடியுடன் (சிறியது) | ஒன்றுக்கு மட்டும் | 425.00 | ஒன்றுக்கு மட்டும் | 430.00 |
| 10 | சாக்கடை சுரண்டி பிடியுடன் (பெரியது) | ஒன்றுக்கு மட்டும் | 520.00 | ஒன்றுக்கு மட்டும் | 545.00 |
| 11 | சீமாறு பிடியுடன் (தெருக்களை கூட்டுதல்) | ஒன்றுக்கு மட்டும் | 195.00 | ஒன்றுக்கு மட்டும் | 205.00 |
| 12 | மண்கூட்டும் பிரஸ் (குச்சிப் பிடியுடன்) | ஒன்றுக்கு மட்டும் | 310.00 | ஒன்றுக்கு மட்டும் | 340.00 |
| 13 | அரிவாள் | ஒன்றுக்கு மட்டும் | 325.00 | ஒன்றுக்கு மட்டும் | 360.00 |

மேற்காணும் இரு நிறுவனங்களிலிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள **M/S சுமதி ஏஜென்சீஸ் , 39/2 வி.எஸ்.காம்பளக்ஸ்,ஈரோடு** என்ற நிறுவனத்தின் ஒப்பந்த புள்ளியை ஏற்கவும் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

பொது சுகாதாரம் அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்கண்ட பொருட்கள் வாங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1600 . நாள்.30.06.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:4**

**கோப்பு எண் : 0292 /2020/இ1**

காங்கயம் நகராட்சி குடிநீர்நிதி 2020–21 ன் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சியில் சிறுமின் விசைப்பம்பு திட்டங்களை பராமரித்து இயக்க குழாய் திருப்புனர்கள், பம்ப் ஆப்பரேட்டர், ஈப்பு ஓட்டுநர், தொழில்நுட்ப உதவியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் தொகை வழங்கும் பணிக்காக 29.05.20–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டை விட +4.85% அதிகம்
2. கங்கணம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டை விட +5.20 % அதிகம்

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர். வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1601 . நாள்.30.06.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.
**மன்றப்பொருள்:5**

**கோப்பு எண் : 0287 /2020/இ1**

காங்கயம் நகராட்சி பொது நிதி 2020–21 ன் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சியில் சிவன் நகர் முதல் தொட்டியபட்டி சாலை வரை உள்ள மண்சாலையை சீரமைத்து குழாய் பாலங்கள் அமைத்து பராமரிப்பு பணிக்காக 29.05.20–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திவ்யதர்ஷினி அன் கோ மதிப்பீட்டை விட +4.95% அதிகம்
2. ஸ்ரீ கணேசலட்சுமி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் மதிப்பீட்டை விட +5.30 % அதிகம்

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர். திவ்யதர்ஷினி அன் கோ அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1602 . நாள்.30.06.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:6**

**கோப்பு எண் : 955/2011 /இ1**

காங்கயம் நகராட்சியில் கட்டுமானம் மற்றும் இடைவெளி நிரப்பும் திட்டம் 2011–12 ன் கீழ் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் சென்னிமலைரோட்டில் ஏற்கனவே உள்ள மயானப்பகுதியில் எரிவாயு தகனமேடை அமைக்கப்பட்டு நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, மேற்படி எரிவாயு தகன மேடையில் உள்ள LPG Firing system இயக்குவதற்கு சிலிண்டர்கள் தேவைப்படுவதை முன்னிட்டு சிலிண்டர்கள் எரிவாயு டீலர் ஸ்ரீ சிவசக்தி கேஸ் கம்பெனி நிறுவனத்திடமிருந்து பெறுவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கும் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மற்றும் அதற்குண்டான தொகையை மேற்படி நிறுவனத்திற்கு வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1603 . நாள்.30.06.2020**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:7**

**கோப்பு எண் 0329/2020/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட உரக்கிடங்கில் MCC மற்றும் FSTP ஆகியவைகள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் உரக்கிடங்கில் RRC-யில் தரம்பிரித்தல் windrow களில் உரம் தயாரித்தல் ஆகிய பணிகள் நடைபெறுவதால் இங்கு பல பணியாளர்கள் தினசரி பணி மேற்கொண்டு வருகின்றனர். இவர்களுக்கு குடிநீர் தேவைக்காக ஒரு தரைமட்ட நீர் தேக்க தொட்டி அமைத்து தண்ணீர் சேகரிக்க வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 1.50 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1604 . நாள்.30.06.2020**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:8**

**கோப்பு எண் : 571/2020 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பொதிகை நகர் பகுதியில் கிழக்கு பகுதியில் வடிகால் அமைத்து தருமாறு இப்பகுதி பொதுமக்கள் கோரி வருகின்றனர். எனவே, இந்த பகுதியில் புதியதாக குடியிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளதால் இப்பகுதியில் வடிகால் அமைக்க வேண்டியது அவசியமானதாக உள்ளது. எனவே, இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1605 . நாள்.30.06.2020**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:9**

**கோப்பு எண் 0344/2020/இ1**

காங்கயம் நகராட்சி அமராவதி ஆற்று குடிநீர் திட்டத்தின் தாளக்கரை தலைமை நீரேற்று நிலைத்ல் 200 MM SLUICE WALVE, 200 MM RETURN WALVE மற்றும் மின்கேபிள்கள் குழாய்கள் பழுதடைந்துள்ளது. எனவே குடிநீர் விநியோகப் பாதிக்கப்பட்டுள்ளது குடிநீர் அவசியம் கருதி மேற்படி உபகரணங்கள் புதியதாக பொருத்த வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1606 . நாள்.30.06.2020**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:10**

**கோப்பு எண் 792 / 2020 / இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 4 மூர்த்திரெட்டிபாளையம் பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி நடந்து வருகிறது. இப்பகுதியிலுள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்புகள் கேட்டு வருகின்றனர். இதற்கு குடிநீர் விநியோக குழாய் விஸ்தரிப்பு செய்ய வேண்டியுள்ளது. தார் சாலை அமைந்த பின்னர் குழாய் விஸ்தரிப்பு மேற்கொள்ளும் பொழுது சாலை சேதமடைய வாய்ப்புள்ளது. எனவே சாலை அமைப்பதற்கு முன்பாகவே குழாய் விஸ்தரிப்பு பணிகள் மேற்கொள்ள இதற்கான உத்தேச மதீப்பீடு ரூ. 5.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1607 . நாள்.30.06.2020**

**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:11**

**கோப்பு எண் 778 / 2020 / இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 காந்தி நகர் பகுதியில் மேற்காக செல்லும் சாலையின் குறுக்காக கழிவு நீர் வடிகால் வழியாக வெளியேறும் பொருட்டு ஒரு குழாய் பாலம் அகைக்கப்பட்டுள்ளது. இந்த குழாய் பாலம் மிகவும் சிறியதாகவு பழுதடைந்த நிலையிலும் உள்ளதால் இதன் வழியாக கழிவு நீர் செல்ல இயலாமல் தேக்கி நிற்கின்றனது. இதனால் சுகாதார கேடு ஏற்படும் நிலை உள்ளது எனவே பொது மக்களின் நலன் கருதி இந்த குழாய் பாலத்தை அகற்றிவிட்டு கான்கீரிட் பாலம் அமைத்து கழிவு நீரை வெளியேற்றலாம். இதற்கான உத்தேச மதீப்பீடு ரூ. 1.40 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சத்தி நான்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1608 . நாள்.30.06.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:12**

**கோப்பு எண் : 559/2020 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய பயன்படும் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் அய்யாசாமி காலணி Pumping station –ல் உள்ள 10 கு.வே நீர் மூழ்கி மின்மோட்டார் தனது திறனை இழந்துள்ளதால் போதுமான அளவு குடிநீர் Pumping செய்ய இயலவில்லை. இதனால் குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த மின் மோட்டாருக்கு பதிலாக 1500lpm கொண்ட 12.5 எச்.பி நீர்மூழ்கி மின் மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகத்தை சீரமைக்கலாம்.

குடிநீர் விநியோகத்தை சீரமைக்கும் பொருட்டு குறிஞ்சி நகர், கொங்கு நகர், வாய்க்கால் மேடு, சென்னிமலை ரோடு, கோட்டை மாநகர், பாரதியார் வீதி பகுதிகளில் குழாய் விஸ்தரிப்பு மற்றும் Interlinking பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மேலும் 2வது வார்டு பாரதியார் வீதி KVR Rice மில் அருகில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள மின் மோட்டார் மற்றும் பைப்புகள் மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே, இதற்கு புதிய மின் மோட்டார் மற்றும் பைப்புகள் பொருத்தப்பட வேண்டியுள்ளது.

திரு.வி.க நகர் காலணியில் குடிநீர் இணைப்புகள் வழங்க பகிர்மான பிரதான மெயின் குழாய்கள் இல்லை. எனவே, பிரதான பகிர்மான குழாய்கள் அமைக்க வேண்டியுள்ளது. தனி அலுவலரால் ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் பணியின் அவசியம் கருதியும் பொது மக்கள் நலன் கருதியும் உடனுக்குடன் மேற்கொள்ளபட்டு நகராட்சிகள் சட்ட விதி எண் 15–ன் கீழ் பணி மேற்கொள்ளபட்டு. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1 .மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1609 . நாள்.30.06.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:13**

**கோப்பு எண் 0639/2020/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு கீழ்கண்டுள்ள இரண்டு குடிநீர் திட்டங்களிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

1) அமராவதி குடிநீர்திட்டம்
2) காவிரி கூட்டுக் குடிநீர்திட்டம்

மேற்கண்ட இரண்டு திட்டங்களில் அமராவதி குடிநீர் திட்டத்தின் தாளக்கரை தலைமை நீரேற்ற நிலையத்திலிருந்து காங்கயம் 10AC மெயின்குலாயில் பல இடங்களில் பழுதுகள் ஏற்பட்டுள்ளது. இதேபோல் காவிரி கூட்டுக்குடிநீர் திட்டத்தின் அய்யாசாமி நகர் காலணி நீரேற்று நிலையத்திலிருந்து மேல்நிலை தொட்டிகளுக்கு நீரேற்ற பயன்படும் 8pvc மெயின் குழாயில் பல இடங்களில் பழுதுகள் ஏற்பட்டுள்ளது. இதனால் குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. இப்பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிள் சட்டம் விதி எண் 15–

ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள தனி அலுவலரால் ஒப்புதல் வழங்கப்பட்டு இந்த பராமரிப்பு பணியினை உடனுக்குடன் மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ளபட்டு இதற்கான உத்தேச மதீப்பீடு ரூ. 5.60 இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சத்தி அறுபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1610 . நாள்.30.06.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:14**

**கோப்பு எண் 0381/2020/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட ஏ.சி நகர் ஆதிதிராவிடர் காலணி பகுதிகளுக்கு போதிய அளவு தண்ணீர் இல்லாமல் பொது மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே இப்பகுதிக்கு அருகாமையில் உள்ள புலிமா நகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வந்து ஏ.சி நகர் ஆதிதிராவிடர் காலணிக்கு விநியோகம் செய்யலாம்.

அகஸ்திலிங்கம்பாளையம் ரோடு, உடையார் காலணி, பாரதியார் நகர் (சின்னாய் புதூர் ரோடு) பகுதிகளில் குடிநீர் விநியோகத்தை சீரமைக்கும் பொருட்டு குழாய் விஸ்தரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. தனி அலுவலரால் ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் பணியின் அவசியம் கருதியும் பொது மக்கள் நலன் கருதியும் உடனுக்குடன் மேற்கொள்ளபட்டு நகராட்சிகள் சட்ட விதி எண் 15–ன் கீழ் பணி மேற்கொள்ளபட்டு. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.7.20 இலட்சத்திற்கு (ரூபாய் ஏழு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1611 . நாள்.30.06.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:15**

**கோப்புஎண். 556/2020/எச்1**

காங்கயம் நகராட்சி பயன்பாட்டில் உள்ள அனைத்து கணினிகளுக்கு தேவையான டோனர்கள் மற்றும் கணினி உபகரணங்கள் 2020–2021 ஆம் ஆண்டிற்கு வாங்குவதற்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.20,00,000/–க்கு (ரூபாய் பத்து இலட்சம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1612 . நாள்.30.06.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:16**

**கோப்புஎண். 556/2020/எச்1**

காங்கயம் நகராட்சி பயன்பாட்டில் உள்ள அனைத்து கணினிகளுக்கு தேவையான A4பேப்பர்கள், பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் ,கணினிக்கு தேவைப்படும் இரசீதுகள் மற்றும் பதிவேடுகள் 2020 –2021 –ஆம் ஆண்டிற்க்கு வாங்குவதற்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/–க்கு (ரூபாய் பத்து இலட்சம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1613 . நாள்.30.06.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:17**

**ந.க.எண்.481/2020/எச்1**

காங்கயம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.1 முதல் 18 முடிய உள்ள பகுதிகளில் கொரேனா தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அப்பகுதியில் உள்ள குடியிருப்புகள், வணிக வளாகங்கள் , தொழிற்சாலை பகுதிகள், பேரூந்து நிலையம், தினசரி மார்கெட், வாரச்சந்தை, அரசு அலுவலகங்கள், அரசு குடியிருப்புகள் அரசு மருத்துவமனை, மற்றும் தனியார் மருத்துவமனை அம்மா உணவகம், மின்மயானப்பகுதி பேரூந்து நிறுத்தும் இடங்கள், காங்கயம் பேரூந்து பணிமனை, வெளிநாடுகளில் இருந்து வந்து இந்நகராட்சி பகுதியில் வசிப்பவர்களின் குடியிருப்புகள், இந்நகராட்சி எல்லைக்குள் வரும் வாகனங்கள் ஆகிய மேற்காணும் அனைத்து பகுதிகளும் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கையாக லைசால் என்னும் கிருமி நாசினியை கொண்டு தொற்று நீக்கம் செய்திடவும், சோடியம் ஹைப்போகுளோரைடு தெளித்தல் பணி செய்தல் நகராட்சி தூய்மை பணியாளர்களும் அலுவலக பணியாளர்களுக்கும் ஒப்பந்த பணியாளர்களுக்கும் தேவையான பாதுகாப்பு உபகரணங்களான கையுறை, முககவசம், முழு உடல் கவச உடை, ஆகியவற்றை தேவையான அளவில் வாங்கிடவும், பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பு குறித்து நோட்டீஸ் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளுதல்.

மேலும் ஒவ்வொரு நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களும் அலுவலகத்தில் இருந்து வெளியில் சென்று வரும் போது ஒவ்வொரு முறையும் கிருமிநாசினியை கொண்டு கைகளை கழுவி சுத்தமாக வைத்து கொரோனா தொற்று ஏற்படாமல் இருக்க முன்னெச்சரிக்கை இருக்க தேவையான சேனிடைசர்கள், கைகழுவும் கிருமி நாசினிகள் வாங்கி பயன்படுத்துதல், நகரின் முக்கிய சாலை ஓரங்களில் அசுத்தமன நீர் நிலைகள் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள் ஆகிய பகுதிகளில் தொற்று நீக்கம் செய்ய தேவையான பிளிச்சீங்பவுடர், சுண்ணாம்புத்தூள், ஆகிய கிருமிநாசினிகள் வாங்கி பயன்படுத்தவும், நகராட்சியில் பணிபுரியும் அலுவலகப்பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள், நிரந்தர பணியாளர்கள், கொசுபுழுஒழிப்பு பணியாளர்கள், குடிநீர் பணியாளர்கள் ஆகியோர் கொரோனா குறித்து ஊரடங்கு காலத்தில் அத்தியாவசிய பணி மேற்கொள்ள அடையாள அட்டைகள் வழங்குதல் போன்ற கொரோனா தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதால், மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள இதற்கு ஆகும் ரூ.30.00 இலட்சம் உத்தேச செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மேலும் இப்பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்ட விதி எண் 15–ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகராட்சி விதி எண் 15 ன் படி பணியை மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1614 . நாள்.30.06.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:18**

**கோப்பு எண் 1277 /2015 /எச்1**

காங்கயம் நகராட்சியில் தமிழக முதல்வர் அவர்களின் சீரிய திட்டமான அம்மா உணவகம் மூலம் ஏழை எளிய நடுத்தர குடும்பங்கள் பயன்பெறும் வகையில் காலை – இட்லி, மதியம் சாம்பார் சாதம் மற்றும் தயிர் சாதம் மிகக் குறைந்த விலையில் உணவுகள் தயார் செய்து பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. 2020–2021ம் ஆண்டிற்கு உணவுகள் தயார் செய்ய தேவையான புழுங்கல் அரிசி, பச்சரிசி, மளிகைப் பொருட்கள், காய்கறிகள், பால், கேஸ் சிலிண்டர், உணவு தயார்செய்யும் மகளிர் சுயஉதவிக்குழு பணியாளர்களுக்கான ஊதியம், ரசீது புத்தகம் மற்றும் உணவகத்தில் ஏற்படும் பழுதுகள் சரிசெய்தல் ஆகிய பணிகளின் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.60.00 இலட்சம் செலவினங்கள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
மேற்கண்ட செலவினங்களை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1615 . நாள்.30.06.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:19**

**கோப்பு எண் 2219 /2015 /எச்1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 18 முடிய உள்ள பகுதிகளில்வடகிழக்கு பருவமழையினால் டெங்கு காய்ச்சல் முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கையாக நகராட்சி பகுதிகளில் உள்ள 16038 கட்டிடங்களில் நல்ல தண்ணீர் சேமித்து வைக்கும் பாத்திரங்கள், கீழ்நிலைத் தொட்டிகள், சின்டெக்ஸ் டேங்க், சிமெண்ட் தொட்டிகள், கண்டெய்னர்களில் உற்பத்தியாகும் கொசுப்புழுக்களை அபேட் மருந்து மற்றும் பிளிச்சிங் பவுடர் தெளித்து அழிக்கவும், வீட்டினை சுற்றியுள்ள பகுதிகளில் தேவையற்ற டயர்கள், பீங்கான்கள், பாட்டில்கள், தேங்காய் சிரட்டைகள் ஆகியவற்றை அப்புறப்படுத்தவும் கொசுப்புழு ஒழிப்பு தற்காலிக களப்பணியாளர்கள் 300 வீடுகளுக்கு 1 களப்பணியாளர்கள் வீதம் 40 நபர்களை பொது சுகாதரா அவசர அவசியம் கருதி நியமித்தமைக்கும் டெங்கு காய்ச்சல் மற்றும் அனைத்து காய்ச்சல் அறிகுறிகளையும் கட்டுப்படுத்திட பொதுமக்களுக்கு தேவையான விழிப்புணர்வு ஏற்படுத்திட நகரின் முக்கிய இடங்களான பேருந்துநிலையங்கள், அரசு மருத்துவமனை, நகராட்சி அலுவலகம், மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் பிளக்ஸ் பேனர்கள் வைத்திடவும், துண்டு பிரசுரங்கள் வீடு வீடாக விநியோகிக்கவும், ஆட்டோ விளம்பரம் செய்திடவும், மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை உயர் அலுவலர்களுக்கு கலர் போட்டோ பிரண்ட்டுகள் மூலம் அறிக்கை அனுப்புதல் ஆகிய மேற்கண்ட பொருள் சம்பந்தமான செலவினங்கள் மேற்கொள்ளவும் மற்றும் 40 களப்பணியாளர்களுக்கான ஊதியம் வழங்கவும் , மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக் குறிப்பு</u>**

1. மாவட்ட ஆட்சியர் அவர்களின் வாரந்திர டெங்கு காய்ச்சல் தடுப்பு குறித்த ஆய்வுக்கூட்ட நடவடிக்கையின் படியும், இணைஇயக்குநர் பொது சுகாதாரம் திருப்பூர் அவர்களின் அறிவுறுத்தலின் படியும் 300 குடியிருப்புகளுக்கு ஒரு தற்காலிக கொசுப்புழு ஒழிப்பு களப்பணியாளர்களை நியமனம் செய்ய மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. மாவட்ட ஆட்சியர், திருப்பூர் அவர்களின் தினக்கூலி அடிப்படைத் தொகைக்கு மிகாமல் மேற்கண்ட தொகையினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1616 . நாள்.30.06.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:20**

**கோப்பு எண் 481/2020 /எச்1**

காங்கயம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டம்பர்பிளேசர், டிப்பர் லாரிகள், மினி ஆட்டோக்கள் மற்றும் JCB டிரேக்டர் ஆகியவற்றின் 2020–2021 –ம் ஆண்டுக்கான மோட்டார் வாகன ஆய்வு சான்று பெறுதல், சாலை வரி செலுத்துதல் மற்றும் வண்டியில் உள்ள பழுதுகள் உதிரிபாகங்கள் புதிதாக மாற்றி பணி மேற்கொள்ளுதல் வாகனங்களுக்கான ஆயில் காப்பீட்டுக்கான தொகை செலுத்துதல், ஆகிய செலவினங்கள் மேற்கொள்ள உத்தேச செலவினம் 15.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்காக வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1617 . நாள்.30.06.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:21**

**கோப்புஎண்.358/2016/அ2**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான தாட்கோ வணிக வளாக கடை எண்கள் 7,8 மற்றும் 10 ஆகிய கடைகளின் குத்தகை காலம் 30.06.2020 உடன் முடிவடைகிறது. மேலும் இக்கடைகளுக்கு வருடாவருடம் பொதுஏலம் நடைபெற்று வருகிறது, தற்போது கொரானா வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக (Covid-19) 144 தடை உத்தரவு அமலில் உள்ளதால் மேற்கண்ட கடைகளுக்கு பொது ஏலம் நடைத்த வழிவகையில்லை. ஆனால் கீழ்கண்ட 2 கடைகளின் உரிமையாளர்கள் மட்டும் தொடர்ந்து கடை நடத்த விருப்பம் தெரிவித்தும் 5% உயர்வு செய்யப்பட்ட வாடகை தொகையினை செலுத்த சம்மதம் தெரிவித்தும் கடிதம் அளித்துள்ளனர். தற்போது ஏலம் நடத்த வழிவகை இல்லாத காரணத்தினால் குத்தகைதாரர் விருப்பத்தின் பேரில் நகராட்சிக்கு வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு குத்தகை காலத்தை 01.07.2020 முதல் மூன்று மாத காலத்திற்கு மட்டும் காலநீட்டிப்பு செய்து வழங்க மன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது.

| வ .எ ண் | பெயர் | குத்தகை இனம் | உரிமைக் காலம் | ஏற்கனவே உள்ள வாடகை | 5% உயர்வு செய்யப்பட்ட தொகை | மாத வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | திரு.பிரகாஷ்– கடை எண் 7 | தாட்கோ வணிக வளாகக் கடைகள் | 01.07.2020 முதல் 31.10.2020 வரை (மூன்று மாதம் மட்டும்) | ரூ.4830/– | ரூ.242/– | ரூ.5072/– |
| 2. | திரு.ராமசாமி– கடை எண் 10 | | | ரூ.4830/– | ரூ.242/– | ரூ.5072/– |

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. வரிசை எண் 1,2–ல் குறிப்பிட்டுள்ள கடைகளின் அவற்றிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள 5% உயர்த்தப்பட்ட வாடகை தொகையுடன் மூன்று மாத காலத்திற்கு கடை உரிமத்தினை தற்காலிகமாக வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேலும், மீதமுள்ள கடை எண் 8-ன் குத்தகைதாரர் கடை வேண்டாம் எனக் கூறியபடியால் இதனை பொது ஏலத்தில் விட மன்றம் அனுமதிக்கலாம்.

3. 144 தடை உத்திரவு அமலில் உள்ளதால் பேரிடர் காலம் முடிவுற்ற பின் ஏலம் நடத்த மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1618 . நாள்.30.06.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:22**

**கோப்புஎண்.755/2016/அ2**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான பழையப் பேருந்து நிலையக் கடை எண் 7,11,12,18,21 மற்றும் 31 ஆகிய கடைகளின் குத்தகை காலம் 30.06.2020 உடன் முடிவடைகிறது. எனவே கீழ்கண்ட கடைகளுக்கு நடப்பு குத்தகை தொகையுடன் 15% உயர்வு செய்து குத்தகை காலத்தை 01.07.2020 முதல் 30.06.2023 வரை காலநீட்டிப்பு செய்து புதுப்பித்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எ ண் | பெயர் | குத்தகை இனம் | உரிமைக் காலம் | ஏற்கனவே உள்ள வாடகை | 15% உயர்வு செய்யப்பட்ட தொகை | மாத வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | முபாரக்–கடை எண் 7 | பழையப் பேருந்து நிலையக் கடைகள் | 01.07.2020 முதல் 30.06.2023 வரை | ரூ.17,400/– | ரூ.2610/– | ரூ.20010/ – |
| 2. | அமுதா– கடை எண் 18 | | | ரூ.9200/– | ரூ.1380/– | ரூ.10580/ – |

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மொத்தம் 2 கடைகளின் அவற்றிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள 15% உயர்த்தப்பட்ட வாடகை தொகையுடன் கடை உரிமம் புதுப்பித்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1619 . நாள்.30.06.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:23**

**கோப்புஎண்.755/2016/அ2**

காங்கயம் நகாட்சிக்கு சொந்தமான பழையப் பேருந்து நிலையக் கடைகளின் குத்தகைகாலம் 30.06.2020 உடன் முடிவடைகிறது. மேலும் கீழ்கண்டபடி கடையின் குத்தகைதாரர்கள் கடையினை புதுபிக்க விருப்பம் இல்லை என விண்ணப்பம் அளித்துள்ளனர். எனவே கீழ்கண்ட கடைகளை பொது ஏலம் விடவும் 144 தடை அமலில் உள்ளதால் பேரிடர் காலம் முடிவுற்ற பின் ஏலம் நடத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | குத்தகைதாரரின் பெயர் | குத்தகை இனம் |
|---|---|---|
| 1 | ராஜாசேகர் | பழையப் பேருந்து நிலையக் கடை எண்–11 |
| 2 | சண்முகசுந்தரம் | பழையப் பேருந்து நிலையக் கடை எண்–12 |
| 3 | சம்பத் | பழையப் பேருந்து நிலையக் கடை எண்–21 |
| 4 | ஈஸ்வரமூர்த்தி | பழையப் பேருந்து நிலையக் கடை எண்–31 |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. கடை நடத்தி வந்த குத்தகைதாரர்கள் கடை தேவையில்லை என கூறியுள்ள படியால் இதனை பொது ஏலத்தில் விடமன்றம் அனுமதிக்கலாம்.
2. 144 தடை அமலில் உள்ளதால் பேரிடர் காலம் முடிவுற்ற பின் ஏலம் நடத்தலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1620 . நாள்.30.06.2020**
**தீர்மானம்:** அனுமதிக்கப்பட்டது.

(ஒ.ம்)XXXXX
திரு.பு.பொன்னம்பலம்
ஆணையாளர்
மற்றும் தனி அலுவலர்
காங்கயம் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையாளர்
காங்கயம் நகராட்சி